இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

திருமுழுக்கு யோவான் பாலைநிலத்துக்கு வந்து, பாவ மன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறைசாற்றி வந்தார். யூதேயாவினர் அனைவரும் எருசலேம் நகரினர் யாவரும் அவரிடம் சென்றனர்; தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் திருமுழுக்குப் பெற்று வந்தனர். யோவான் ஒட்டக முடி ஆடையை அணிந்திருந்தார்; தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் உண்டு வந்தார். (மாற்கு 1:4-6)

# இளையோரே, திருஅவையில் மகிழ்ச்சியான கதாநாயகர்களாக இருங்கள்!

## திருத்தந்தை அறிவுறுத்தல்

வத்திக்கான்: நவம்பர் 26, கடந்த ஞாயிறன்று, தான் வழங்கிய மூவேளை செப உரைக்குப் பின்பு, கிறிஸ்து அரசர் பெருவிழாவைச் சிறப்பிக்கும் இந்நாளில், உலகின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலமாகத் திகழும் இளையோர் அனைவரும் திருஅவையின் வாழ்க்கையில் மகிழ்ச்சியின் கதாநாயகர்களாக இருக்குமாறு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

1930-களில் சோவியத் ஒன்றியத்தின் கீழ் இலட்சக்கணக்கான உக்ரைன் மக்கள் பட்டினியால் கொல்லப்பட்ட Holodomor எனப்படும் இனப்படுகொலை நிகழ்வையும் நினைவுகூர்ந்தார் திருத்தந்தை.

இரஷ்யாவின் உக்ரைன் மீதான தொடர்ச் சியான ஆக்கிரமிப்பைக் குறிப்பிட்ட திருத்தந்தை, அந்தச் சிதைந்த காயத்தைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக, அந்த அன்பான மக்களைத் தொடர்ந்து துன்புறுத்தும் போரின் அட்டூழியச் செயல்கள் மனதிற்கு இன்னும் அதிக வேதனையை அளிக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

மோதலில் பிளவுபட்ட அனைத்து மக்களுக் காகவும் தொடர்ந்து அயராது இறை வேண்டல் செய்யுமாறு அழைப்புவிடுத்த திருத்தந்தை, இறைவேண்டல் என்பது, வெறுப்பின் சூழலைத் தகர்க்கும், பழிவாங்கும் போக்கை உடைத்து, ஒப்புரவிற்கான பாதைகளை வழங்கும் அமைதிக்கான வலிமை என்று கூறினார்.



அப்போது புனித பூமியை நோக்கித் தனது பார்வையைத் திருப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான சண் டையை நிறுத்தியதற்காகவும், போரிடும் தரப்பினரால் பிடிக்கப்பட்ட சில பிணையக் கைதிகள் மற்றும் கைதிகளை விடுவித்த தற்காகவும் கடவுளுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் மற்ற அனைவரும் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், அவர்களது குடும்பங்களைக் கருத்தில் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை, மனிதாபிமான உதவிகள் காசாவிற்குள் சென்றடைவதற்கான வழிகள் திறக்கப்பட இறைவேண்டல் செய்யுமாறும், அதேவேளையில் உரையாடலின் அவசியத் தையும் வலியுறுத்தினார்.

**யாரெல்லாம் உரையாடலை விரும்பவில்லையோ, அவர்கள் அனைவரும் அமைதியை விரும்பாதவர்கள் : இளையோரே, திருஅவையில் மகிழ்ச்சியான கதாநாயகர்களாக இருங்கள்!**

இறுதியாக, துபாயில் அடுத்த வாரம் தொடங்கவிருக்கும் COP-28 எனப்படும் காலநிலை மாற்றத்திற்கான உலகளாவிய மாநாடு குறித்து நினைவுகூர்ந்த திருத்தந்தை, போரைத் தவிர, நமது உலகம் பருவநிலை மாற்றம் எனப்படும் மற்றொரு பெரிய ஆபத்தால் அச்சுறுத்தப்படுகிறது என்றும், இது பூமியில் உள்ள உயிர்களுக்கு, குறிப்பாக நம் எதிர்கால சந்ததியினருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும், இது, வாழ்க்கைக்கான அனைத்தையும் படைத்த கடவுளின் திட்டத்திற்கு முற்றிலும் எதிரானது என்றும் கூறினார்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் -*

# பெட்டாலிங் மாவட்டத்தில் வசதி குறைந்தோர்க்கு உதவி

**பெட்டாலிங் ஜெயா** : பெட்டாலிங் மாவட்ட அளவில் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக உதவி மற்றும் சந்தை பல்வேறு சமயச் சமூகங்கள் மற்றும் உள்ளூர் சமூகத் தலைவர்களை ஒன்றிணைக்கும் ஒரு கூட்டு முயற்சியாக நடைபெற்றது.

கடந்த நவம்பர் 19 ஆம் தேதி அனுசரிக்கப்பட்ட உலக ஏழைகளின் தினத்தை முன்னிட்டு இங்குள்ள புனித இஞ்ஞாசியார் (புனித இக்னேசியஸ்) (SIC) பங்கு மற்றும் பூச்சோங்கிலுள்ள குவாடலூப்பே அன்னை பங்கு ஆகியவற்றின் பங்கு முழுமனித வளர்ச்சி பணிக்குழுக்களின் ஏற்பாட்டில் மேற்கண்ட நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த முயற்சியின் மையமாக லெம்பா சுபாங் PPR தேர்வுச் செய்யப்பட்டது. அரிசி, மாவு, வெங்காயம், உருளைக்கிழங்கு, உப்பு மற்றும் சார்டின் போன்ற அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த முயற்சிக்கு SS7-ல் உள்ள மஸ்ஜித் நூருல் யாகின் (Masjid Nurul Yaqin) நிறுவனமும் மதிய உணவு பொட்டலங்களையும் வழங்கின.

இந்த நிகழ்வின் போது, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களும் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் முழுமனித வளர்ச்சி அலுவலகத்தின் இயக்குனர் டாக்டர் கெரி லியூவ், புனித இஞ்ஞாசியார் பங்கின் பங்குத்தந்தை லோரன்ஸ் இங் ஆகியோர் உதவிப்பெற்ற குடும்பங்களோடு இணைந் தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அத்துடன் அன்று, பிளாஸ்டிக் கழிவுகளை அலங்காரப் பொருட்களாக மாற்றும் Encik Mahmud அவர்களின் தனித்துவமிக்க கைவினை திறனையும் இந்நிகழ்வு சிறப் பித்தது. மேற்கண்ட உடனடி உதவிக்கு அப்பால், சிலாங்கூரில் உள்ள PERKESO இன் சேவைகள், வேலை ஆட்சேர்ப்புப் புள்ளிவிபரங்கள் வழங்குதல் மற்றும் இல்லத்தரசிகளுக்குச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை "அறிமுகப்படுத்துதல் போன் றவை அனைவரையும் கவர்ந்தது. இது முற்றிலும் பல இனத்தார் இணைந்த சமூகப் பணியாக மாறியது.

*செய்தி தமிழாக்கம் : ஆர்.கே.*

# ஆசிய கலாச்சாரத்திலிருந்து கற்றுக்கொள்ள நிறைய உள்ளன

ஒன்றிணைந்து நடைபோடும் திருஅவையில் தகவல் தொடர்புகள் என்ற தலைப்பில் கடந்தவாரம் தாய்லாந்தின் பாங்காக்கில் ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பும், சமூகத் தொடர்பு அலுவலகங்களும் இணைந்து நடத்தியக் கூட்டத்தில் சமூகத் தொடர்புகளுக்கான திருப்பீடத் துறையின் தலைவர் முனைவர் பவுலோ ரூஃபினி கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஐந்து நாட்கள் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் உரையாற்றிய முனைவர் ரூஃபினி அவர்கள், தலைமைத் திருஅவைக்கும் தலத்திருஅவைகளுக்கும் இடையே ஒருவருக்கொருவர் ஆதரவை வரவேற்கும் திருப்பீடம், தகவலை வழங்குவதில் அல்ல, உறவுகளை வளர்ப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுகிறது என எடுத்துரைத்தார்.

மனிதர்கள் ஒருவரையொருவர் நேரடியாகச் சந்தித்து தங்களிடையே எண்ணங்களையும், அக்கறைகளையும், கனவுகளையும் பகிர்ந்து கொள்வது எப்போதும் அழகானது என உரைத்த முனைவர் ரூஃபினி அவர்கள், அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்துள்ளது என்பதையும், தோற்றத்தையும் தாண்டி ஒன்றை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதையும் ஆசிய கலாச்சாரத்திலிருந்து பிறர் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

சமூகத் தொடர்புகளுக்கான திருப்பீடத் துறையால் சமூகத் தொடர்புகளின் மேய்ப்புப் பணி சிந்தனைகள் குறித்து வெளியிடப்பட்ட 34 பக்க ஏடும் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

டிஜிட்டல் உலகில் விசுவாச புலப்படுத்தல் என்ற தலைப்பில் திருப்பீட சமூகத் தொடர்புத்துறையால் நடத்தப்பட்டுவரும் திட்டத்தில் இந்த ஆயர் பேரவைகளின் கூட்டத்தின்போது ஆசியாவைச் சேர்ந்த சமூகத்தொடர்பாளர்கள் இணையதளம் வழியாகப் பங்குபெற்றனர்.

பிலிப்பீன்ஸ், மலேசியா, மியான்மார்,



*முனைவர் பவுலோ ரூஃபினி*

சிங்கப்பூர், வியட்நாம், இந்தியா, கிழக்கு திமோர், பாகிஸ்தான் மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த இளையோர் இதில் கலந்துகொண்டனர்.

ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் தலைவரும் யாங்கூன் பேராயருமான கர்தினால் Charles Bo, பாங்காக் கர்தினால் Francis Xavier Kriengsak, ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் சமூகத் தொடர்புகளுக்கான அலுவலகத் தலைவர், கர்தினால் Sebastian Francis உட்பட ஏறக்குறைய 30 பேர் இந்த பாங்காக் கூட்டத்தில் நேரடியாகப் பங்குபெற்றனர்.

# சமூகத்தின் அக்கறையில் மாற்றுத்திறனாளிகளுக்கு மைய இடம்

சமூகத்தின் அக்கறையில் மாற்றுத்திறனாளிகளுக்கு மைய இடம் வழங்கப்பட வேண்டும் என நாம் அனைவரும் ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்வோம் என தன் செவ்வாய்க்கிழமை டுவிட்டர்



செய்தியில் அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மாற்றுத்திறனாளிகள் குறித்த தன் அக்கறையை வெளிப்படுத்தும் டிசம்பர் மாதத்திற்கான செபக்கருத்தையொட்டி இந்த டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை, அவர்கள் மீதான அக்கறை சமூகத்தின் மையமாக இருக்க வேண்டும் என செபிப்போம் என்ற விண்ணப்பத்தை விடுத்துள்ளதுடன், அனைத்து நிறுவனங்களும் மாற்றுத்திறனாளிகளின் உயிர்துடிப்புடைய பங்கேற்பை ஊக்குவிக்கும்வண்ணம் அவர்களை உள்ளுக்குள் கொணரும் திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும் என கேட்டுள்ளார்.

நவம்பர் 28ஆம் தேதி வெளியிட்ட இந்த டுவிட்டர் செய்தியுடன் ஆங்கிலத்தில் மட்டும் இதுவரை 5162 குறுஞ்செய்திகள் திருத்தந்தையின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. 1 கோடியே 86 இலட்சம் பேர் இந்த டுவிட்டர் செய்திகளைப் பார்வையிட்டுள்ளனர்.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்**

# திருமண பயிற்சியாளர்களின் அடிப்படை தயாரிப்பு தியானம்

**கோலாலம்பூர்:** கத்தோலிக்கத் திருமண பயிற்சியாளர்களுக்கு வெகு காலத்திற்குப் பின் கடந்த 19-11-2023 அன்று, கெப்போங், டேசா ஜெயாவில் உள்ள கிறிஸ்து ஒளி சிற்றாலயத்தில் அரை நாள் தியானம் நடைபெற்றது. **'நம் தயாரிப்பு அவர்களின் நிலையான இணைப்பு'** எனும் தலைப்பில் இப்பணிக் குழுவின் ஆன்மீக ஆலோசகரான அருள்பணி பீட்டர் அந்தோணி அவர்கள் இத்தியானத்தை வழிநடத்தினார். அன்று இத்தியானத்தில் பங்கெடுத்த 28 பயிற்சியாளர்களுக்கு மூன்று முக்கிய கருத்துக்களை அருட்தந்தை எடுத்துரைத்தார்.

1. பயிற்சியாளர்களின் அடித்தளம் உள் ஆன்மீகத்தில் ஊன்றியிருக்க வேண்டும்.
2. மார்த்தாள மரியாவைப்போல் எடுத்துக்காட்டுகளைக் காட்டி, முதலில் மரியாவைப்போல் இயேசுவின் பாதம் அமர்ந்து வார்த்தைகளை உள்வாங்கி, பின்னர் மார்த்தாவைப்போல் பணியில் ஈடுபட வேண்டும்.
3. தங்கள் குடும்ப வாழ்வு பிறருக்கு முன்மாதரியாகவும் கிறிஸ்துவுக்குச் சாட்சியமாகவும் இருத்தல் வேண்டும்.


*தியானப் பயிற்சியில் கலந்துகொண்ட தம்பதியர்*

மேற்கண்ட கருத்துக்களை மனதில் நிறுத்தி, பணியில் ஈடுபடுவதன் வழியாக திருமணம் செய்ய விரும்புவோருக்கு சிறந்த பயிற்சியை வழங்க முடியும் என்றார்.

மேலும், திருமண வாழ்வு இக்காலத்தில் பெரும் சவால்களுக்கு உட்படுவதால், எதிர்வரும் காலங்களில் இத்திருமண பயிற்சிப் பட்டறைகள் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் சிறப்பாக நடத்தப்பட முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

'மணமக்கள் தங்களுக்குள் ஒரே அன்பாலும் மன ஒற்றுமையாலும் ஒருவர் ஒருவரை புனிதப்படுத்துவதாலும் இணைந்திருப்பார்களாக' (2 வத். சங்க ஏடு: இன்றைய உலகில் திருச்சபை:52) எனும் படிப்பினையை வலியுறுத்த பயிற்சியாளர்கள் நினைவுறுத்தப்பட்டனர்.

*-பிரான்சிஸ் தோமஸ், பூச்சோங்*

# வருகிறவரை வரவேற்க நம்மைச் செம்மைப்படுத்துவோம்!

திருவருகை என்பது இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்கு தயாரிக்கும் காலம் என்பதை விட மேலானது கருத்து அடங்கியிருக்கிறது. திருவருகை என்பது இறுதிநாளில் கிறிஸ்து மாட்சியோடு மீண்டும் வருவதை நோக்கி நாம் தயாராக இருப்பது. இன்றைய நற்செய்தியில் ஆண்டவரின் வருகைக்காக மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என திருமுழுக்கு யோவான் அறைகூவல் விடுக்கிறார்.

முதல் வாசகத்தில், நாடு கடத்தப்பட்டு அடிமைத்தனத்தில் இருக்கும் இஸ்ராயேல் மக்கள் விடுதலைப் பெறுவர் என்ற நல்வாக்கு வழங்கப்படுகிறது. எகிப்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குக் கொண்டு வந்த ஆண்டவர், பாபிலோனியாவில் இருந்து மீண்டும் தாய் நாட்டிற்குக் கொண்டு வருகிறார் என்ற நல்வாக்கை இறைவாக்கினர் எசாயா அறிவிக்கிறார்.

இந்த இறைவாக்கினர் எசாயாவை மேற்கோள் காட்டி, ஆண்டவர் வருகைக்கு ஆயத்தமாக இருக்கும்படி திருமுழுக்கு யோவான் இன்றைய நற்செய்தியில் அழைப்பு விடுக்கிறார். அதற்காக பாவ மன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெற வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைக்கிறார். திருமுழுக்கு யோவான் இங்கு மூன்று (3) விடயங்களைத் தெளிவுப்படுத்துகிறார். திருமுழுக்குப் பெறுங்கள்; இரண்டாவது பாவ அறிக்கை (மன்னிப்பு) செய்யுங்கள்; மூன்றாவது தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுங்கள்.

விண்ணுலகத் திருஅவையின் முன்னோடியாக விளங்கும் இவ்வுலகத் திருஅவையில் உறுப்பியத் தகுதியை வழங்கும் திருமுழுக்கு, விண்ணகப் பாதைக்கு வழிகாட்டுகிறது. “என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை” (யோவா.14:6) என்றுரைத்த கிறிஸ்துவே திருஅவைத் தலைவராக இருக்கிறார்.

பரமத் தந்தையிடம் செல்வதற்கு நாம் தூய்மை பெற வேண்டும். ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நாம், “மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய்க் காணும் வகையில் முழு முயற்சி செய்யுங்கள்” (2பேதுரு3:14) என இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கிறது. பாவ மன்னிப்பு, வாக்களிக்கப்பட்ட தாயகத்திற்கான இலவச விசாவை வழங்குகிறது.

பாதையைச் செம்மையாக்குங்கள் என்றால் என்ன? அன்றாடும் பாவம் செய்கிறோம். பாவம் கடவுளுடனான நமது உறவைப் பலவீனப்படுத்துகிறது. அந்த உறவுப் பாதையை செம்மைப்படுத்த வேண்டும். அதற்கு நமக்கு நாமே உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், “ வழியும் உண்மையும் வாழ்வும் நானே” (யோவா.14:6) என ஆண்டவர் கூறுகிறார். மாசு கொண்ட மனத்தோடு, வேதம் ஓதுவதில்லை பயனில்லை. மாசற்ற வாழ்வு மாண்புயர்வைக் கொண்டு வரும். பாதையைச் செம்மையாக்கியப் பின்

துணிவோடு பயணம் நடத்தி விடு...
மறைந்திடும் பாவம்; கிடைத்திடும் பாவ மன்னிப்பு.

*அந்தணி இன்னாசி, சைபர்ஜெயா, சிலாங்கூர்*

**திருவருகைக்காலம் 2-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா. 40: 1-5, 9-11 |
| தி.பா | 85: 8ab-9. 10-11. 12-13 |
| 2-ம் வாசகம் | 2 பேதுரு 3: 8-14 |
| நற்செய்தி | மாற்கு 1: 1-8 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 ((B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**